தென்காசி தெற்கு மாவட்டம் தென்காசி நகர தி.மு.க.சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் முன்னிட்டு கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.அதனைத் தொடர்ந்து தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு. கலை கதிரவன் முன்னிலையில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன்,பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். உடன் நகர செயலாளர் சாதிர் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

தென்காசி தெற்கு மாவட்டம் குற்றாலம் பேரூர் தி.மு.க.சார்பில் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழா குற்றாலம் பேரூர் பகுதியில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு குற்றாலம் பேரூர் செயலாளர் சங்கர் என்ற குட்டி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்பு வழங்கப்பட்டது. நிகழ்வில் அவைத் தலைவர் மாடசாமி பாண்டியன், முன்னாள் துணைச் செயலாளர் சுடர் பழனி,முன்னாள் ஒன்றிய செயலாளர் ராமையா என்ற துரை,அறங்காவலர் குழு உறுப்பினர் வீரபாண்டியன்,ஒன்றிய பிரதிநிதி குத்தாலிங்கம் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

சிவகங்கை மாவட்டத்தில்

முத்தமிழ் அறிஞர் கலைஞர் 103 ஆவது பிறந்தநாள் - நலத்திட்ட உதவிகள்!

கே ஆர் .பெரிய கருப்பன் - மு.தென்னவன் பங்கேற்பு!

சிவகங்கை, ஜூன் 5- முத்தமிழ் அறிஞர் கலைஞர் 103 ஆவது பிறந்தநாள் விழா சிவகங்கை மாவட்டத்தில் ஒன்றிய, நகர ,பேரூர், ஊராட்சிகளில் சிறப்பாக கொண்டாடப் பட்டது. ஊராட்சிகளில் கலைஞர் திருவுருவப் படம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மாவட்டம் முழுவதும் கழகக் கொடி ஏற்றியும், இனிப்புகள் வழங்கியும், நலத்திட்ட உதவிகள் வழங்கியும் முதியோர் இல்லங்களில் மதிய உணவுகள் வழங்கியும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

திருப்பத்தூர்

திருப்பத்தூர் பஸ் நிலையம் எதிரில் முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவப்படத்திற்கு மாவட்ட கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் மலர் தூவி மரியாதை செலுத்தினார். அவரை தொடர்ந்து மாவட்ட சுற்றுச்சூழல்அணி அமைப்பாளர்எஸ்.எஸ்.ஏ.வல்லபாய், பேரூர் கழக செயலாளர் ஆ ர் . கார்த்திகேயன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் எஸ். எஸ். அருணாச்சலம், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் காளி முத்து,அயலக அணி சன் சீமான் சுப்பையா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே .எஸ். நாராயணன் , பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி கோகிலராணி நாராயணன், துணைத்தலைவர் கான் முகமது, நிர்வாகிகள் ராம. ரவி, பிள்ளையார்பட்டி சதீஷ், ஷாஜகான், இளைஞர் அணி பஷீர் அகமது, மனோகரன், பொருளாளர் ஏ.எம் கண்ணன் ,மாணிக்கம் ஒன்றிய துணைச் செயலாளர் எஸ். முத்துக்குமார் உட்பட வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

திருக்கோட்டியூர் திருக்கோட்டியூர் பஸ் நிலையம் அருகே ஊராட்சி செயலாளர்சக்கரவர்த்தி என்ற அ.கார்த்தி தலைமையில் கலைஞர் திருமணத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இதில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மாணிக்கம் வசந்த், மகளிர் அணி வசந்தி உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சிவகங்கை

சிவகங்கை நகர் அண்ணா சிலை அருகில் அலங்கரிக்கப்பட்டிருந்த கலைஞர் திருஉருவப் படத்திற்கு சிவகங்கை நகர் கழக செயலாளர் சி.எம்.துரை. ஆனந்த் மலர் தூவி மரியாதை செலுத்தினார். அதனை தொடர்ந்து பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட செய்தி தொடர்பாளர்அ.அயூப்கான், ஒன்றிய கழக செயலாளர்கள் திருமலை முத்துராமலிங்கம், எம் ஜெயராமன், நிர்வாகிகள் ஜெயகாந்தன், ராமதாஸ், கண்மணி, முத்து மணி, உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். சிவகங்கை மேற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் காமராஜ் நகரில் உள்ள முதியோர் இல்லத்தில் மதிய உணவு ஒன்றிய செயலாளர் பெ. மந்தக்காளை தலைமையில் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் முன்னாள் ஒன்றிய குழு தலைவர் முத்துராமலிங்கம் அரசு ,பாண்டியராஜன், பாலா, மகளிர் அணி புவனேஸ்வரி ,உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். சிவகங்கை தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் அறிவாலயத்தில் ஒன்றிய செயலாளர் எம்.ஜெயராமன் தலைமையில் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இதில் நிர்வாகிகள் மனோகரன், முருகன், வேல்முருகன், பொன்னம்பலம்,இளைஞரணி செல்வம் மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் திலகவதி கண்ணன், உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். வழக்கறிஞர் அணி சார்பில் மாவட்ட நீதிமன்ற வளாகத்தின் முன்பாக மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர். எஸ். பாஸ்கரன் தலைமையில் கலைஞர் திருஉருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது . இந்த நிகழ்ச்சியில் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் கே. முத்துராமலிங்கம், வழக்கறிஞரணி நிர்வாகிகள் ஆதி. அழகர்சாமி, கோதண்ட பாணி உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். காமராஜர் காலனியில் உள்ள முதியோர் இல்லத்தில் வழக்கறிஞர்கள் சார்பில் ஆர். பிரபாகரன் தலைமையில் வழக்கறிஞர்கள் கார்த்தி, ஆனந்தகுமார், முன்னாள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் துஷாந்த் பிரதீப் குமார் சதீஷ், காட்டு ராஜா, ஏ. எஸ். செந்தில் கோகுல் செல்வராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காரைக்குடி

24 வது வட்டத்தில் மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில் ஏற்பாட்டின் பேரில் கலைஞர் திருஉருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு முன்னால் அமைச்சர் மு.தென்னவன், மாநகர செயலாளர் துணை மேயர் நா.குணசேகரன் ஆகியோர் தலைமை தாங்கினார்கள். நிகழ்ச்சியில் சட்டமன்றத் தேர்தலில் சிறப்பாக தேர்தல் பணியாற்றிய வெல்லும் தமிழ் பெண்களுக்கு சால்வை அணிவித்து பாராட்டு தெரிவிக்கப்பட்டது . பதினைந்தாவது வட்டத்தில் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் தலைமையில் மாவட்ட திராவிட கழக காப்பாளர் சாமி திராவிட மொழி தலைமை கழக பேச்சாளர் பிராட்லா உட்பட நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினார்கள் மாவட்ட சுற்றுச் சூழல் துணை அமைப்பாளர் சுரேஷ் சாய் ஏற்பாட்டின் சார்பில் பொது மக்களுக்கு பிரியாணி வழங்கப்பட்டது. மாவட்ட சிறுபான்மை அணி துணை அமைப்பாளர் சேட் மாமன்ற உறுப்பினர் ராணி ஜெய் துன் சேட் ஆகியோர் சார்பில் பொது மக்களுக்கு அரிசி மற்றும் உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டது. காரைக்குடி பழைய பேருந்து நிலையத்தில் பி.ஆர் வைரவன் வட்டச் செயலாளர் சிவக்குமார் பாண்டியன் ஏற்பாட்டின் பேரில் பிரியாணி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிகளில் மாவட்ட மாநகர அவை தலைவர் சன். சுப்பையா, துணை செயலாளர் அன்பு, பூமிநாதன், ரமேஷ், மகளிர் அணி லட்சுமி கணேஷ், ஆனந்தி குமார் பிரியா உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். மாவட்ட பொறியாளர் துணை அமைப்பாளர் பாண்டி செல்வம் ஏற்பாட்டின் பேரில்முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமையில் மாவட்ட இளைஞரணிஅமைப்பாளர் நாகனி செந்தில் குமார் மாநகர துணை செயலாளர் நா. குணசேகரன் ஆகியோர் பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்களை வழங்கினார்கள். காளையார் கோவில் தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் மறவமங்கலத்தில் பஸ் நிலையம் முன்பாக முத்தமிழறிஞர் கலைஞர் திருஉருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது ஒன்றிய செயலாளர் யோக கிருஷ்ணகுமார் தலைமையில் ஒன்றிய துணைச் செயலாளர் கோதண்டபாணி அவைத்தலைவர் வரதராஜன் ஆகியோர் முன்னிலையில் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் நிர்வாகிகள் தோக்கப்பன், மனோகரன் நவநீதகிருஷ்ணன் , கோபால், விஜயகுமார், காட்டு ராஜா ,செந்தமிழ், ரமேஷ் ,ஐயப்பன் ,மோகன், அழகர்சாமி, நாகநாதன் ,செந்தில் குமார் ,சம்பத், பிச்சை ,கருணாநிதி அழகர் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். காளையார்கோவில் கிழக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் பஸ் நிலையம் முன்பாக ஒன்றிய கழகச் செயலாளர்வே. ஆரோக்கியசாமி தலைமையில் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது .பொது மக்களுக்கு இனிப்பு மற்றும் அரிசி போன்ற பொருட்கள் வழங்கப்பட்டது.

காளையார்கோவில் வடக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் சொக்கநாதபுரம் கொல்லங்குடி ஆகிய ஊர்களில் கழகக் கொடி ஏற்றி கழக தலைவர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் கண்ணன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள் . காளையார்கோவில் தெற்கு ஒன்றிய துணைச் செயலாளர் ஆர்.கோதண்டபாணி ஏற்பாட்டின் பேரில் நாட்டரசன் கோட்டை அருள்மிகு கண்ணுடைய நாயகி அம்மன் ஆலயத்தில் கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு பேரூர் கழகச் செயலாளர் ஜெயராமன் மதிய உணவை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் நிர்வாகிகள் ஆர்.வி.எஸ். அரங்கநாதன் மாணவரணி ரமேஷ் என்ற சொக்கு உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். இளையான்குடி இளையான்குடி ள்ள வடக்கு ஒன்றியம் மற்றும் பேரூர் கழகத்தின் சார்பில் இளையான்குடியில் தலைவர் கலைஞர் திருவுருவப் படத்திற்கு முன்னாள் எம். எல்.ஏ. சுப .மதியரசன் தலைமையில் பேரூர் கழக செயலாளர் பி.ஏ.நஜ்மூதீன் முன்னிலையில் மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் விவசாய அணி காளிமுத்து, முன்னாள் கூட்டுறவு சங்கத் தலைவர் சுப. தமிழரசன் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் டி.கே. இப்ராஹிம், நிர்வாகிகள் சாரதி என்ற சாருஹாசன், தகவல் தொழில்நுட்ப அணி கே. கண்ணன், ஒன்றிய துணை செயலாளர் வே. கருணாகரன், சிவனேசன், ராஜேந்திரன் ,நீலமேகம் ,சிவக்குமார், இளைஞரணி பைரோஸ் கான், பேருர் கழக நிர்வாகிகள் கம்பன் காதர் ,பாபு தாவூத் காதர் ,இப்ராகிம் வேட்டை, தகவல் தொழில் நுட்ப அணி மெடிக்கல் காதர் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள் . சிங்கம்புனரி ஒன்றியம் மற்றும் பேரூர் கழகத்தின் சார்பில் அண்ணா மன்றத்தில் அமைக்கப்பட்டுள்ள அமைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் மற்றும் முன்னாள் அமைச்சர் திருவுருவச் சிலைகளுக்கு முன்னாள் அமைச்சர் மாவட்ட கழகச் செயலாளர் கே ஆர். பெரியகருப்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதைத் தொடர்ந்து பஸ் நிலையம் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா திருவருச்சிலைக்கு கே ஆர் . பெரிய கருப்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பொது மக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் கணேசன் ,ஒன்றிய கழக செயலாளர்கள் பூமணி என்ற பூமிநாதன், கே. பாலசுப்பிரமணியன், துணைச் செயலாளர் எஸ். முத்துக்குமார் ,சிவபுரிசேகர், பொருளாளர் பாஸ்கரன், செல்வகுமார், புகழேந்தி ,இளைஞரணி மனோகரன் , ஒன்றிய துணை செயலாளர் சொக்கநாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.சோமசுந்தரம் பேரூராட்சி துணை தலைவர் இந்தியன்செந்தில், பேரூர் கழக செயலாளர் கதிர் வேல், பேரூராட்சி உறுப்பினர் திவ்யா பிரேம்குமார், மாணவர்ணி மனோகரன் துணைச்செய லாளர் அலாவுதீன் யாகூப் ,செந்தில் கிருஷ்ணன் ,சிவக்குமார் , அவைத் தலைவர் சிவக்குமார் ,துணைச் செயலாளர் லோகநாதன் ,தனுஷ் கோடி பூமிநாதன், காஜா ,முகமது ஞானி, செந்தில், சையது இப்ராஹீம், முரசொலி கார்த்தி ,சிராஜுதீன், சுப்பிரமணி முத்துக்குமார், அறிவு ஜெயக்குமார் ,மாணவரணி யுவராஜ், இளைஞரணி மூர்த்தி, காசிம், அசாருதீன் ,அருண் ராஜா ,ராமநாதன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

சமூக நீதிக் காவலர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்103 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு மதுரை சிம்மக்கல் சுற்றுச் சாலையில் அமைந்துள்ள கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அய்யன் திருவள்ளுவர் இலக்கிய மன்றத் தலைவர் என்.எம். மாரி தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டது. நிகழ்வில் மன்றத்தின் பொருளாளர் "அகவை முதிர்ந்த தமிழறிஞர் " க.வெ. நெடுஞ்சேரலாதன், டி.வி. அழகர், ச. செல்வக்குமார், லெ. முருகேசன், ப. பாண்டித்துரை, ரெ. கார்த்திகேயன், இல. வெள்ளைச்சாமி, புரட்சிப் பாவலர் மன்றத் தலைவர் " பெரியார் நெறியாளர் " பி. வரதராசன், இராம. வைரமுத்து, ம.தி.மு.க தொழிற்சங்கப் பேரவைத் தலைவர் மகபூப்ஜான், குறும்பா கவிஞர் இராம. இரவி, கருப்பு ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

நெல்லை கிழக்கு மாவட்டம் நாங்குநேரி மேற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட பொறுப்பாளர் கிரகாம்பெல் அறிவுறுத்தலின் படி நாங்குநேரி ஒன்றிய செயலாளர் ஆர். எஸ்.சுடலைக்கண்ணு தலைமையில் ஒன்றிய அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி விட்டு,ஓசானம் அன்பு இல்லத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.நிகழ்வில் ஒன்றியக்குழு துணைத் தலைவர் இசக்கிபாண்டி,தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் சங்கர், இளைஞர் அணி அருள்ராஜ் டார்வின், ஆறுமுகம்,சுரேஷ்.துரைராஜ்,வர்கீஸ், உதயகுமார்,பார்வதி உட்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

நெல்லை கிழக்கு மாவட்டம் இராதாபுரம் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட பொறுப்பாளர் கிரகாம்பெல் அறிவுறுத்தலின்படி ஒன்றிய செயலாளர் மி.ஜோசப் பெல்சி ஏற்பாட்டில் தெற்கு கள்ளிகுளம் ஜி.எம். மருத்துவ மனையில் (3ஆம் தேதி)பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்தார்.நிகழ்வில் ஒன்றிய அவைத் தலைவர் இ.ராமையா, பொருளாளர் செங்குட்டுவன், துணைச்செயலாளர் செழியன், மாவட்ட பிரதிநிதிகள் சமூக முரளி, கோவிந்தராஜ்,மருத்துவரணி அமைப்பாளர் ஜெபஸ்டின் ஆனந்த், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இசக்கிபாபு,ஊராட்சி மன்ற தலைவர் முருகேசன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மாநகராட்சி 24வது வார்டில் மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில் ஏற்பாட்டின் பேரில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. சட்டமன்ற தேர்தலில் பணியாற்றிய வெல்லும் தமிழ்ப்பெண்கள் தேர்தல் பணிகளை பாராட்டிசால்வை அணிவிக்கப்பட்டது.